

நேற்று (07.03.2026) சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள ஜீவா இல்லத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் புதுப்பிக்கப்பட்ட சென்னை ஜீவா இல்லம் மற்றும் மாமல்லபுரம் புதுப்பிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி. அ.ராமன், தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய செயலாளர் திருமதி ஆர். செந்தில்குமாரி, கூடுதல் தொழிலாளர் ஆணையர் சென்னை திருமதி யாஸ்மின் பேகம் அவர்கள், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை செயலாளர் கி.நடராஜன் மற்றும் துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் திருத்தணி சட்டமன்ற தொகுதியில் கலைஞர் நூலகம் திறப்பு விழா திருத்தணியில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்துகொண்டு நூலகத்தை திறந்து வைத்து பார்வையிட்டு முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு 7 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் 2 நபர்களுக்கு இலவச ஆட்டோ வழங்கினார். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், நகரச் செயலாளர் வி.வினோத் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### டி.பி.ஆர்.மனோஜ் குமார் தலைமை! டி.லோகநாதன் வரவேற்புரை! ந.கோபால்–எஸ்.டி.கருணாநிதி–ஏ.மோகனன் பங்கேற்பு!

# திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் கிரிக்கெட் போட்டி!

## வெற்றிபெற்றவர்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன்–டி.ஆர்.பாலு எம்.பி. பரிசு வழங்குகின்றனர்!

திருப்பெரும்புதூர், மார்ச் 8-

கழக தலைவர்- முதல்வர் அவர்களின் 73 வது பிறந்நாளை முன்னிட்டு திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று (08.03.2026- ஞாயிற்றுக்கிமை) காலை 9.00 மணிக்கு தண்டலத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் டி.பி.ஆர். மனோஜ்குமார் தலைமை வகிக்கிறார். தண்டலம் ஊராட்சி இளைஞர் அணி கிளைக் கழக அமைப்பாளர் டி.லோகநாதன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். சூ. டான்போஸ்கோ, கோ.சீனிவாசன், எஸ்.ஆர்.சுதாகர், டி.ஆர். மோகன்ராஜ், எஸ்.சூர்யா, தே.சண்முகம், எஸ்.ருஸ்தாக்அகமது, ஜி.மருது பாண்டி, கு. தேவபிரசாத், வீ.ராம்குமார், ப. புகழ்வாணன், ப. கோகுலகண்ணன், தா.அஜித்குமார், ஆர்த்தி ஆகியோர் முன்னிலை அகிக்கின்றனர்.

திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் ந.கோபால், வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.டி.கருணாநிதி, ஒன்றிய அவைத் தலைவர் ஏ.மோகனன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு ஆகியோர் பரிசு வழங்குகின்றனர்.

இதில் த.துரைசாமி, பிரபு கஜேந்திரன், படப்பை ஆ.மனோகரன், கோல்டு டி.பிரகாஷ், மா.கணேஷ்பாபு,ஜா.செந்தில் தேவராஜ், ப.இராமமூர்த்தி, கு.ப.முருகன், எல்.டி.ஜார்ஜ், த.தணிகாசலம்,கோ.விநாயகமூர்த்தி, பா.முத்துகுமாரசாமி, க. முருகன், ச.தேவேந்திர பாபு, ஏ.டோம்னிக், இரா. அருண்பாரத், எ. அரிகிருஷ்ணன், டாக்டர் ஓவியா முருகன், மாலதி போஸ்கோ, எஸ்.கே. பாலா என்கிறபால்ராஜ், கோ.பால்ராஜ், கோ. கல்பனா, க.ரவிச்சந்திரன், ஜெகன்குமார், சுபரஞ்சனி கன்னியப்பன், ப. பரமசிவன், எஸ்.ஏ.சர்தார்பாஷா, பி.ஆர்.நேரு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இரா.மாரி,து.தணிகாசலம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கோ.சத்தியமூர்த்தி – பானு வரவேற்கின்றனர்! சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# ஏ.கோதண்டம் - கோ.சுபத்திரையம்மாள் இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி வாழ்த்துரை!

காஞ்சிபுரம், மார்ச் 8 -

திருப்பெரும்புதூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கோதண்டம் - சுபத்திரையம்மாள் ஆகியோரின் மகன் வழி பேத்தியும் குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி – பானு சத்தியமூர்த்தி ஆகியோரின் புதல்வியுமான கே.எஸ்.சமித்ராவுக்கும், பழந்தண்டலம் எம். ஜானகிராமன் – ஜெ.அலமேலு ஆகியோரின் புதல்வர் ஜெ.பிரதீப்க்கும் மணவிழா வரவேற்பு நாளை (9.3.2026 திங்கட்கிழமை) மாலை 6:30 மணி அளவில் கரசங்கால் ஹர்ஷா கார்டனில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ். பாரதி, கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ., மீ.அ. வைதியலிங்கம், படப்பை மனோகரன் ஆகிய பங்கேற்று மண மக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் க.செல்வம், எம்.பி., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., ஆர்.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., த.துரைசாமி, துணை மேயர் கோ.காமராஜ், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஆ.தமிழ்மாறன், சரஸ்வதி மனோகரன், எஸ்.டி.கருணாநிதி, நா.கோபால், ஏ.வந்தே மாதரம், திருமுடிவாக்கம் ஏ.மணி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, ஆர்.சதீஷ்குமார், எஸ்.சாந்தி, சதீஷ்குமார், உமா மகேஸ்வரி, வந்தே மாதரம், டி.கே. குமாரசாமி, டி.எஸ்.கலைச்செல்வன், எம்.சங்கர், கே.கே.ராஜமாணிக்கம், டி.திருநாவுக் கரசு, மாலதி போஸ்கோ, எம்.ஆர்.சீனிவாசன், மு.செல்வமணி, வி.அரி, சுமதி முருகன், தா.மோ.எழிலரசன், சி.என்.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

குன்றத்தூர் கழகச் செயலாளர் – நகர்மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி – பானு சத்தியமூர்த்தி ஆகியோர் மணவிழா வரவேற்புக்கு வருகை தருவோரை வரவேற்கின்றனர்.

### சென்னை மாநகராட்சி 2026–2027 நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி,


# 29,461 பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டம்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச்.8–

மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக்காலங்களில் வெயிலின் தாக்கத்திலிருந்து பணியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர களப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டத்தை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று (07.03.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் தொடங்கி வைத்தார்.

இதன் தொடக்கமாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மயானபூமி பணியாளர்கள், பொது கழிவறை மற்றும் மலேரியா பணியாளர்கள் என 100 தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கப்பட்டது. இத்திட்டம் அனைத்து மண்டலங்களிலும் பணிபுரியும் 29,461 மாநகராட்சிப் பணியாளர்களுக்கு 09.03.2026 அன்று முதல் ஆவின் மோர் வழங்கப்படவுள்ளது.



மேயர் அவர்களின் 2026–27ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, கோடைக் காலங்களில் வெயிலின் தாக்கத்தை போக்கவும், நீர்ச்சத்தை பராமரிக்கவும், உடல் வெப்பத்தை தணிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், கோடைக் காலங்களான மார்ச் மாதம் 2026 முதல் ஜூன் மாதம் 2026 வரை ஆவின் நிறுவனத்திடம் இருந்து குளிர்ச்சியான 200 மீ. லிட்டர் மோர் ரூ.8 விலைக்கு கொள்முதல் செய்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பணிபுரியும் நிரந்தர, சுயஉதவிக் குழு, NMR மற்றும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், மலேரியா பணியாளர்கள், மயானபூமிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், பொதுக் கழிவறைகளில் தூய்மைப் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சியின் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானப் பணியாளர்கள் மற்றும் களப் பணியில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள் என மொத்தம் 29,461 பணியாளர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனத்திற்கு ரூ.8/க்கு குளிர்ச்சியான 200 மில்லி லிட்டர் மோரை (பாக்கெட்டில்) மண்டலங்களில் அடையாளம் காட்டப்பட்ட 30 இடங்களில் விநியோகம் செய்ய ஆவின் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு தோராயமாக ரூ.2.83 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 29,461 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் களப் பணியாளர்கள் கடுமையான கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாகவும், அவர்களின் உடல் வெப்பத்தை தணிக்கவும், நீர்ச்சத்தை பராமரிக்கவும், இந்த குளிர்ச்சியான மோர் வழங்கும் திட்டம் உதவுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கண்காணிப்பு பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மைத் துறை) பாலமுரளி மற்றும் அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு அயன்புரம் பணிமனையில். சங்க இணைச் செயலாளர் க. செல்வம் தலைமையில் நல உதவிகள் வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது இந்த விழாவிற்கு மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் PTC எஸ்.ரவி (ஏ) சிவகுமார், சங்கத்தின் பொதுச்செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம், சங்கத்தின் பொருளாளர் எம்.பெருமாள், சங்க நிர்வாகிகள் மற்றும் பணிமனை நிர்வாகிகள் செயல் வீரர்கள் பங்கேற்றனர்.

### திராவிட மாடல் முதலமைச்சர் பிறந்த நாள் விழா!

# தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. சார்பாக தமிழ்நாடு முழுவதும் நல உதவிகள்!

## மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்!

சென்னை, மார்ச். 8-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின் கழகத் தொ.மு.ச. சார்பாக நடைபெற்றது.





மார்ச் -1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா சாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

**நலஉதவிகள்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள தூய்மைப் பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 நபர்களுக்கு ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்பட்டது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

அப்பொழுது தொழிலாளர்களிடம் மத்தியில் பேசிய சங்க மாநில பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக ஐந்து முறை ஆட்சி புரிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மக்களுக்கு வழங்கிய திட்டங்களால் மக்களின் வாழ்வு மேம்பட வைத்தார்கள் என்று எடுத்துரைத்தார்கள்.

அன்புத்தளபதி மின் வாரிய பணியாளர்களுக்கு வழங்கிய சலுகைகள்:

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரோனா பெருந்தொற்று நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிபுரிகிறவர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பணி பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், உடனுக்குடன் அகவிலைப்படி உயர்வு, கருணைத் த்தொகையுடன் போனஸ், அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர செய்தார்கள்.

**தமிழ்நாடு மக்களுக்கான திட்டங்களில் சில:**

கலைஞரின் கனவு இல்லம்

தமிழ்நாட்டில் 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.

வேலைக்காகவும், கல்விக்காகவும் பயணிக்கும் பெண்களுக்கு விடியல் பயணத் திட்டம்.

உயர் கல்வியை ஊக்குவிக்க 5.29 இலட்சம் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்.

20.59 இலட்சத்திற்கு மேலான குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

21.70 இலட்சத்திற்கும் மேலான மாற்றுத் திறனாளிகள், மற்றும் முதியவர்களுக்கு நேரடி ரேசன் பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டம்.

பணி மற்றும் கல்வி நிமித்தமாக வெளியூர் செல்லும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு தமிழ்நாடு முழுவதும் தோழி விடுதித் திட்டம்.

ஆதரவற்ற முதியவர்கள், சுயமரியாதை யோடு வாழ்வதற்காக மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் உதவித் தொகை திட்டம்.

1256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் தமிழ்நாடெங்கும் இலவச மருத்துவ சேவைகள் வழங்கும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். என்று சிவில் சர்வீஸ் தேர்வுக்கென்று உருவாக்கப்பட்ட நான் முதல்வன் திட்டம்.

கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்.

கற்றல் இடைவெளியை குறைக்கும் இல்லம் தேடி கல்வித் திட்டம்.

கைம்பெண்களுக்கு மாத உதவித்தொகை ரூ.1200

பள்ளிகள் மேம்பாட்டிற்கு பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், நம்ம ஊரு, நம்ம பள்ளி

சாலை மேம்பாட்டிற்கு முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்.

ஆதிதிராவிட இளையோரை தொழில் முனைவோருக்கும் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம்.

தமிழ் மரபை இளையோரிடம் கொண்டு சேர்க்க மாபெரும் தமிழ்க் கனவு திட்டம்.

மின் புகார்களை நுகர்வோர் 24 மணிநேரமும் தெரிவிக்க மின்னகம்"

1.70 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு

தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பிக் போட்டிகள், சர்வதேச ஹாக்கி போட்டிகள், சர்வதேச சார்ஃபிங் போட்டிகள், ஸ்குவாஷ் உலக போட்டிகள், முதல் முறையாக தமிழ்நாட்டில் கேலோ இந்தியா போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு ஊக்கத்தொகை என விளையாட்டுத்துறை மேம்பாடு.

**எல்லோருக்கு எல்லாம்**

மகளிர், மாணவ, மாணவிகள், பள்ளி குழந்தைகள், முதியோர்கள் மாற்றுத் திறனாளிகள் என எல்லோருக்கு எல்லாம் ஆன தமிழ்நாடு மக்கள் போற்றும் திரா விட மாடல் ஆட்சி வழங்கும் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளில், அவர்களின் நல் பொற்கால ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என சூளுரைப்போம் என்று தொழிலாளர்கள் மத்தியில் மின்கழகத் தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா. மணிமாறன் எடுத்துரைத்தார்.

### 102 (அ) வட்டப் பகுதிப் பிரதிநிதி

# மணிகண்டன் தந்தை கோ.கன்னியப்பன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, மார்ச் 8-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 102 அ வட்ட பகுதி பிரதிநிதியும், டாக்டர் அம்பேத்கர் நகர் குடியிருப்போர் பொது நல சங்கத்தின் செயலாளர் ஆ.மணிகண்டன் தந்தை கோ.கன்னியப்பன் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (07.03.26) மாலை 5.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் மறைந்த கோ.கன்னியப்பன் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.





வேளச்சேரி சட்டமன்றதொகுதிக்குட்பட்ட 177வது வார்டில் உள்ள வெங்கடேஸ்வரா நகர் 100 அடி சாலையில் வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் மேம்பாட்டின்கீழ் ரூபாய் 20 இலட்சம் செலவில் சிறுவர் விளையாட்டு பூங்காவினை வேளச்சேரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் எம்.எச்.ஹசன்மௌலானா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார். உடன் பகுதி கழக பொறுப்பாளர் வே.ஆனந்தம் எம்.சி., மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி., வட்ட செயலாளர்கள் ஜி.பி.எஸ்.பாலசதீஷ், க.பாரதிதாசன், வி.சக்திவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.